Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | திங்கள், ஜனவரி 20, 2025 | இதழ் 282

# பொங்கல் முடிந்து ஊர் திரும்பும் மக்கள்

## ஜிஎஸ்டி சாலையில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க கடும் கட்டுப்பாடுகள்



சென்னை, 20 ஜனவரி 2025: பொங்கல் பண்டிகைக்கு சொந்த ஊருக்கு சென்றவர்கள் மீண்டும் சென்னைக்கு திரும்புவதால் ஜிஎஸ்டி உள்ளிட்ட முக்கிய சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. இதனையடுத்து நெரிசல் இல்லாமல் பயணம் மேற்கொள்ள தாம்பரம் மாநகர காவல் ஆணையரகம் சார்பில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு சில அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளது.

இது குறித்து தாம்பரம் மாநகர ஆணையராக போக்குவரத்து போலீசார் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:

சென்னை நோக்கி வரும் கனரக வாகனங்கள் செங்கல்பட்டு - காஞ்சிபுரம் சாலையை பயன்படுத்தி ஒரகடம் வழியாக பயணிக்க வேண்டும். சிங்கப்பெருமாள் கோவில் வழியாக திருப்பி, ஒரகடம் மற்றும் ஸ்ரீபெரும்புதூர் வழியாக செல்ல வேண்டும். திருப்போரூர் வழியாக வரும் கனரக வாகனங்கள் டாக்டர் அம்பேத்கர் சிலையில் திருப்பி, செங்கல்பட்டு வழியாக பயணிக்க வேண்டும்.

பல்லாவரம் புதிய பாலத்தில் ஒருவழி போக்குவரத்து

மேலும், ஜிஎஸ்டி ரோடு, வண்டலூர்-கேளம்பாக்கம் சாலை, ஓஎம்ஆர், மற்றும் ஈசிஆர் சாலைகளில் கனரக வாகனங்களுக்கு இன்று மதியம் 2 மணி முதல் 20 ந் தேதி மதியம் 2 மணி வரை அனுமதி வழங்கப்படமாட்டாது.

தெற்கு ரயில்வே, பயணிகள் தங்கள் பயணத்தை விரைவாக முடிக்க செங்கல்பட்டு, மறைமலை நகர், பொத்தேரி, மற்றும் காட்டாங்கொளத்தூர் ரயில் நிலையங்களில் இருந்து 15 நிமிட இடைவெளியில் சிறப்பு ரயில்களை இயக்குகிறது. பல்லாவரம் புதிய பாலத்தில் ஒருவழி போக்குவரத்து தேவையான சமயங்களில், இன்று மதியம் 2 மணி முதல் 20 ந் தேதி மதியம் 12 மணி வரை, பல்லாவரம் புதிய பாலத்தில் சென்னை நோக்கி ஒருவழி போக்குவரத்து நடைமுறைப் படுத்தப்படும்.

ஜிஎஸ்டி ரோட்டில் போக்குவரத்தை விரைவுபடுத்த, ஆம்னி பேருந்துகள் வெளிவட்ட சாலை வழியாக பூந்தமல்லி மற்றும் மதுரவாயல் நோக்கி திருப்பப்படும். மேலும், முடிச்சூர் சாலை சந்திப்பில், மற்ற வாகனங்களையும் தேவையானபோது வெளிவட்ட சாலை தாம்பரம் நோக்கி திருப்ப வாய்ப்புள்ளது, இதன் மூலம் போக்குவரத்து எளிதாக்கப்படும்.

சென்னை நகருக்குள் பாதுகாப்பாக சிரமமின்றி பயணம் மேற்கொள்ள பொது மக்களின் ஒத்துழைப்பை நல்கும் படி தாம்பரம் மாநகர போக்குவரத்து காவல்துறை கேட்டுக் கொண்டுள்ளது.

# கடும் குளிர்: அமெரிக்க அதிபர் டிரம்ப் பதவி ஏற்பு விழாவில் மாற்றம்

## 40 ஆண்டுகளில் முதல்முறையாக உள் அரங்கில் நடக்கிறது



சென்னை, 20 ஜனவரி 2025: அமெரிக்காவில் நிலவும் கடும் குளிரால் பதவியேற்பு விழாவை பொதுவெளியில் நடத்த இயலாது என்றும், ஜனவரி 20ம் தேதி 3 மணிக்கு உள் அரங்கத்தில் நடைபெறும் என்றும் டொனால்ட் டிரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா அதிபர் தேர்தலில் டொனால்டு டிரம்ப் அபார வெற்றி பெற்றார். அவர் வரும் ஜனவரி 20ம் தேதி அதிபராக பதவியேற்க உள்ளார். இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் சிறப்பாக நடந்து வருகிறது. இந்திய அரசு சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் பங்கேற்க உள்ளார்.

பொதுவாக பதவி ஏற்பு விழா அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டப்பேரவைக்கு அருகே பொதுவெளியில் நடத்தப்படும். ஆனால் அமெரிக்காவில் தற்போது நிலவும் கடும் குளிர் காரணமாக பதவி ஏற்பு விழா பொதுவெளியில் நடத்தப் போவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

பதவியேற்பு விழா குறித்து டொனால்ட் டிரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஜனவரி 20ம் தேதி அவ்வளவு வேகமாக வர முடியாது. ஆரம்பத்தில் என்னையும், எனது நிர்வாகத்தையும் எதிர்த்தவர்கள் கூட, தற்போது பதவியேற்பு விழா எப்போது நடக்கும் என்று விரும்புகிறார்கள். நம் நாட்டு மக்களைப் பாதுகாப்பது எனது கடமையாகும்.

வானிலை முன்னறிவிப்பை கருத்தில் கொண்டு, பதவியேற்பு விழா, வரும் ஜனவரி 20ம் தேதி மதியம் 3 மணிக்கு (அமெரிக்க நேரப்படி) உள் அரங்கத்தில் நடக்கிறது. எந்த வகையிலும் மக்கள் காயப்படுவதை நான் பார்க்க விரும்பவில்லை. பல்லாயிரக்கணக்கான சட்ட அமலாக்கப் பிரிவினர், போலீசார் மற்றும் குதிரைகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் ஜனவரி 20ம் தேதி பல மணி நேரம் வெளியில் இருப்பது ஆபத்தான நிலைமையாகும். எந்தவொரு நிகழ்விலும், நீங்கள் வர முடிவு செய்தால், பாதுகாப்பு ஆடைகளை அணியுங்கள்.

மிகவும் குளிரான காலநிலை காரணமாக பதவியேற்பு உரையை உள் அரங்கத்தில் நடத்த உத்தரவிட்டு உள்ளேன். பல்வேறு உயரதிகாரிகள் மற்றும் விருந்தினர்கள் அரங்கிற்கு அழைத்து வரப்படுவார்கள். இது அனைவருக்கும் மிகவும் அழகான அனுபவமாக இருக்கும்.

இந்த வரலாற்று நிகழ்வை தொலைக்காட்சியில் நேரலையாகக் காண, அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டு உள்ளன. பிற்பகல் 3 மணிக்கு கேபிடல் அரங்கில் வெற்றிப் பேரணி நடைபெறும். பிற்பகல் 1 மணிக்கு அரங்கில் கதவுகள் திறக்கப்படும். தயவுசெய்து சீக்கிரம் வர வேண்டும். எல்லோரும் பாதுகாப்பாக இருப்பார்கள், அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள், நாங்கள் ஒன்றாக சேர்ந்து, மீண்டும் அமெரிக்காவை சிறந்ததாக மாற்றுவோம்.

இவ்வாறு டிரம்ப் கூறியுள்ளார். அமெரிக்காவில் கடந்த 40 ஆண்டுகளில் முதல்முறையாக அதிபர் பதவியேற்பு விழா மூடிய திடலுக்குள் நடத்தப்படவுள்ளது. 1985ம் ஆண்டில் முன்னாள் அதிபர் ரொனால்ட் ரீகனின் பதவியேற்பின்போது, வெப்பநிலை மைனஸ் 23 முதல் மைனஸ் 29 டிகிரி செல்சியஸ் என்ற அளவில் இருந்தது. இதனையடுத்து, ரீகனின் பதவியேற்பு விழாவும், இவ்வாறே மூடப்பட்ட திடலுக்குள் நடத்தப்பட்டது. இதேபோல் டிரம்ப் பதவியேற்கும் 20 ந்தேதி வெப்பநிலை மைனஸ் 7 டிகிரி செல்சியஸ் இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது. அமெரிக்காவின் 9-வது அதிபர் வில்லியம் ஹாரிசன் 1841ம் ஆண்டில் பதவியேற்றபோது, குளிர் காற்று வீசிய நேரத்தில் பொதுவெளியில் பதவியேற்பு விழா நடத்தினார். ஆனால் பதவியேற்ற ஒரு மாதத்திற்குள்ளாகவே நிமோனியாவில் பாதிக்கப்பட்டு உயிரிழந்தார். நிமோனியாவால் பாதிக்கப்பட்டாலும், குளிர் காற்றில் அதிக நேரம் இருந்ததால்தான், நிமோனியா பாதித்ததாக இன்றளவிலும் கூறுகின்றனர். மேலும் ஹாரிசன் அமெரிக்க வரலாற்றில் குறுகியகால அதிபராக இருந்தவர். டிரம்ப்பின் பதவியேற்பு விழாவை உள் அரங்கில் நடத்தத் திட்டமிட்டிருப்பதால், பலரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

# ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல்

## தி.மு.க. – நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் வேட்பு மனு ஏற்பு

**நேரடி மோதல்**



சென்னை, 20 ஜனவரி 2025: ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற இடைத்தேர்தலில் தி.மு.க. நாம் தமிழர் கட்சி வேட்பாளர்ளின் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டன. இதன் மூலம் இரு கட்சிகளுக்கும் இடையே நேரடி போட்டி நிலவுகிறது.

ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உடல் நலக்குறைவால் கடந்த மாதம் 14-ந்தேதி சென்னையில் காலமானார். இதனால் ஈரோடு கிழக்கு தொகுதி காலியானது. இதைத்தொடர்ந்து ஈரோடு கிழக்கு தொகுதியில் பிப்ரவரி 5-ந் தேதி இடைத்தேர்தல் நடைபெற உள்ளது இதையடுத்து ஈரோடு கிழக்கு தொகுதியில் இடைத்தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் கடந்த 10-ஆம் தேதி தொடங்கி நேற்று மாலை நிறைவடைந்தது. முதல் நாளில் சுயேச்சைகள் பத்மராஜன், நூர் முகமது, மதுரைவிநாயகம் ஆகிய 3 பேரும், 13- ஆம் தேதி சேலம், தாதகாபட்டி ராஜசேகர், ஈரோடு 46 புதூர் கோபால கிருஷ்ணன், ராமநாதபுரம் மாவட்டம், சோழந்தூர் கஜினி முகமது என்ற பானை மணி, தருமபுரி ஆனந்த், ஈரோடு மரப்பாலம் முகமது கைபில், சென்னை இசக்கிமுத்து என 6 பேர் மனுதாக்கல் செய்தனர். நூர் முகமது கூடுதலாக ஒரு வேட்புமனுவை தாக்கல் செய்தார். இறுதி நாளான நேற்று அங்கீகரிக் கப்பட்ட அரசியல் கட்சிகள் வரிசையில் திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார், அவருக்கு மாற்று வேட்பாளராக அவரது மனைவி அமுதா ஆகியோர் மனுதாக்கல் செய்தனர். நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமி, அவருக்கு மாற்று வேட்பாளராக மேனகா ஆகியோர் மனு தாக்கல் செய்தனர். பின்னர் பதிவு பெற்ற கட்சிகள் சார்பில் 49 வேட்பாளர்கள் 55 மனுக்களை தாக்கல் செய்தனர். 3 நாள்களிலும் சேர்த்து 58 வேட்பாளர்கள் 65 மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். இதில் வி.சி.சந்திரகுமார் 4, சீதாலட்சுமி 3, நூர்முகமது 2, அக்னி ஆழ்வார் 2 மனுக்களை தாக்கல் செய்துள்ளனர். ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட 65 வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று காலை 11 மணி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

மாலை 3 மணி வரை வேட்பு மனுக்கள் பரிசீலனை நடைபெறுகிறது. வரும் 20-ஆம் தேதி வேட்புமனுக்களை திரும்பப்பெற கடைசி நாளாகும். அன்று மாலை வேட்பாளர் இறுதி பட்டியல் சின்னத்துடன் அறிவிக்கப்படுகிறது. பிப்ரவரி 5- ந் தேதி ஈரோடு கிழக்கு தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது. இந்த நிலையில், திமுக வேட்பாளர் வி.சி.சந்திரகுமார் மற்றும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மா.கி.சீதாலட்சுமி ஆகியோர் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற வேட்பாளர்களின் மனுக்களை தேர்தல் நடத்தும் அதிகாரி பரிசீலித்து

# இந்திய கடற்படை கப்பல் மும்பை, பன்னாட்டு பயிற்சியான லா பெரூஸ் பயிற்சியில் பங்கேற்றுள்ளது



சென்னை, 20 ஜனவரி 2025: உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட ஏவுகணை அழிப்புக் கப்பலான 'ஐஎன்எஸ் மும்பை', பன்னாட்டு பயிற்சியான எல்ஏ பெரோஸின் நான்காவது பதிப்பில்பங்கேற்கிறது. இந்த பதிப்பில் ஆஸ்திரேலிய கடற்படை, பிரெஞ்சு கடற்படை, அமெரிக்க கடற்படை, இந்தோனேசிய கடற்படை, மலேசிய கடற்படை, சிங்கப்பூர் கடற்படை, கனடா கடற்படை உள்ளிட்ட பல்வேறு கடற்படைகள் பங்கேற்கின்றன.

பயிற்சி, தகவல் பகிர்வு ஆகியவற்றுடன் கடல்சார் கண்காணிப்பு, கடல்சார் தடுப்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் பொதுவான கடல்சார் சூழ்நிலை விழிப்புணர்வை வளர்ப்பதை இந்த பயிற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தக் கூட்டுக் கடற்படை பயிற்சி ஜனவரி 16-ம் தேதி முதல் 24-ம் தேதி வரை நடைபெறுகிறது. பாதுகாப்பான இந்தோ-பசிபிக் பிராந்தியத்திற்கான கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான இந்தியாவின் தொலைநோக்குப் பார்வைக்கு ஏற்ப இந்த கப்பலின் பங்கேற்பு அமைந்துள்ளது.

# அமெரிக்காவில் ஒரே நாளில் 2500 கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கிய ஜோ பிடன்



சென்னை, 20 ஜனவரி 2025: அமெரிக்காவில் ஒரே நாளில் 2500 கைதிகளுக்கு அமெரிக்க அதிபர் ஜோ பிடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

நடந்து முடிந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற்ற நிலையில் வரும் திங்கள்கிழமை அவர் பதவி ஏற்க உள்ளார். எனவே தற்போதைய அதிபர் ஜோ பிடன் தனது அதிகாரத்தை பயன்படுத்தி முக்கிய உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார்.

குற்ற வழக்கில் சிக்கிய தனது மகன் ஹண்டர் பிடனுக்கு பொது மன்னிப்பு வழங்கியது, ரஷ்யா மீது கண்டம் விட்டு கண்டம் தாவும் ஏவுகணைகளை பயன்படுத்த உக்ரைனுக்கு அனுமதி கொடுத்தது உள்ளிட்டவையும் அதில் அடங்கும்.

இந்நிலையில் பதவிக்காலத்தின் இறுதி நாட்களில் இருக்கும் ஜோ பிடன் நேற்று ஒரே நாளில் 2500 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கி உள்ளார்.வன்முறையற்ற சாதாரண போதைப் பொருள் குற்றங்களுக்காக சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட சுமார் 2,500 பேருக்கு தனது சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜோ பிடன் பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

அமெரிக்க வரலாற்றிலேயே ஒரே நாளில் இத்தனை பேருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது இதுவே முதல் முறை.

வன்முறையில் ஈடுபடாதபோதிலும் மிகக் கடுமையான தண்டனை விதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதாக பிடன் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். முன்னதாக அமெரிக்காவின் மத்திய நீதிமன்றங்களால் 37 பேருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து கடந்த மாதம் அவர் உத்தரவிட்டிருந்தார்.

அவர்கள் செய்த கொலை கண்டிக்கத்தக்கதாக இருப்பினும் மரண தண்டனை விதிக்கப்படுவது தவறு என்பதால் அவர்களுக்கான தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைப்பதாக பிடன் கூறினார். கடந்த 2003 முதல் மத்திய நீதிமன்றத்தால் விதிக்கப்படும் மரண தண்டனைகள் நிறைவேற்றப்படாமல் இருந்த நிலையில் 2016 ல் பதவி ஏற்ற டிரம்ப் மீண்டும் அதை செயல்பாட்டுக்கு கொண்டு வந்தார்.

டிரம்ப் அதிபராக பதவி ஏற்க உள்ள நிலையில், அவரிடம் இருந்து மரண தண்டனை கைதிகளை பாதுகாக்க ஜோ பிடன் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இயக்க செயல்பாடுகளை விரிவாக்க கூடுதலாக ரூ.0.71 பில்லியனை முதலீடு செய்யும் ஸ்டான்டர்டு கேப்பிட்டல் மார்க்கெட்ஸ் லிமிடெட்

சென்னை, 20 ஜனவரி 2025: வங்கிசாரா நிதி நிறுவனங்கள் துறையில் (என்பிஎஃப்சி), முன்னணி வகிக்கும் ஸ்டான்டர்டு கேபிபிட்டல் மார்க்கெட்ஸ் லிமிடெட், 2024 டிசம்பர் 17 அன்று வெளியிட்ட முந்தைய பத்திரிகை செய்தியின் தொடர் செயல்பாடாக தனது இயக்க செயல்பாடுகளுக்காக கூடுதலாக 0.71 பில்லியன் என்ற தொகையை பயன்படுத்தவிருப்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறது. இதற்கு முன்னதாக, ரூ.1.3 பில்லியன் என்ற தொகை இதற்கென ஒதுக்கப்பட்டிருந்ததை இந்நிறுவனம் அறிவித்திருந்தது.

ரூ.5 பில்லியன் மதிப்பிற்கு மாற்ற இயலாத கடன் பத்திரங்களின் (என்சிடி) வெற்றிகரமான வெளியீட்டைத் தொடர்ந்து இந்நிறுவனத்தின் முக்கிய உத்திவாய்ந்த முன்னெடுப்புகளின் ஒரு தகுதியாக இந்த முதலீடு மேற்கொள்ளப்படுகிறது. இந்நிறுவனம், அதன் இயக்க ரீதியிலான உட்கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்திற்காக ரூ.2.01 பில்லியன் என்ற தொகையை வெற்றிகரமாக திரட்டி ஒதுக்கீடு செய்திருக்கிறது. இயக்க ரீதியிலான திறனை மேம்படுத்துவதும், செயல்பாடுகளின் பரப்பெல்லையை விரிவாக்குவதும் மற்றும் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி நடவடிக்கைக்கு ஆதரவளிப்பதும் இந்த முதலீடு பயன்படுத்தப்படுவதன் சிறப்பு நோக்கமாக இருக்கும். ஸ்டான்டர்டு கேப்பிட்டல் மார்க்கெட்ஸ் லிமிடெட் - ன் நிர்வாகம் இது தொடர்பாக கூறியதாவது: "எமது பிசினஸ் மாடல் மற்றும் வளர்ச்சி சாத்தியங்கள் மீது முதலீட்டாளர்களின் வலுவான நம்பிக்கையை இந்த மாற்ற இயலாத கடன் பத்திரங்களின் வெற்றிகரமான வெளியீடு மறுஉறுதி செய்கிறது. எமது இயக்க செயல்பாடுகளுக்காக ரூ.0.71 பில்லியன் என்ற தொகையைப் பயன்படுத்துவது, எமது சந்தை அந்தஸ்தை வலுப்படுத்துவதற்கும், இயக்க ரீதியிலான நேர்த்தி நிலையை முன்னெடுப்பதற்கும் நாங்கள் கொண்டிருக்கும் பொறுப்புறுதியை வெளிப்படுத்துகிறது, எமது வாடிக்கையாளர்களுக்கும், பங்குதாரர்களுக்கும் நீண்டகால மதிப்பையும், ஆதாயத்தையும் உருவாக்கி வழங்குவது மீது எமது சிறப்பு கூர்நோக்கம் தொடர்ந்து இருந்து வருகிறது."

இயக்க ரீதியிலான மேம்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கும் கூடுதலாக இந்த என்சிடி வெளியீட்டிலிருந்து திரட்டப்பட்ட நிதியில் எஞ்சியிருக்கும் தொகையானது பல்வேறு முக்கிய முன்னெடுப்புகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும். விரிவாக்க முயற்சிகள், நடப்பு மூலதன தேவைப்பாடுகள் மற்றும் தற்போது இருந்து வரும் கடன் பொறுப்புகளை குறைத்தல் ஆகியவை இவற்றுள் உள்ளடங்கும்.

இந்த முக்கியமான முதலீடுகள், நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சிக்கும், புத்தாக்கத்திற்கும் மற்றும் பங்குதாரர்களின் மேம்பட்ட மதிப்பிற்கும் நிறுவனத்தை இட்டுச்செல்லும் என்று ஸ்டான்டர்டு கேபிபிட்டல் மார்க்கெட்ஸ் லிமிடெட் உறுதியாக நம்புகிறது. தனது வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் அக்கறைப் பங்காளர்களுக்கு நீண்டகால அடிப்படையில் மதிப்பு உருவாக்கம் மீது தனது கூர்நோக்க செயல்பாட்டை தொடர்வதில் இந்நிறுவனத்தின் தலைமைத்துவ குழு ஆழமான பொறுப்புறுதி கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றும் ரூ.1 இலட்சம் என்ற வெளியீட்டு விலையில், ஒவ்வொன்றும் ரூ.1 இலட்சம் என்ற முகமதிப்பில் 5600 தரநிலைப்படுத்தப்படாத, பட்டியலிப்படாத மற்றும்பாதுகாப்பு பெற்ற என்சிடி-க்களின் ஒதுக்கீடு மூலம் மொத்தத்தில் ரூ.56 கோடி என்ற நிதி திரட்டல் திட்டத்திற்கும் இந்நிறுவனம் ஒப்புதல் அளித்திருக்கிறது.

# 9எம்எஃப்ஒய்25-ல் சிறப்பான வருவாயை பதிவுசெய்திருக்கும் ஜி ஜி இன்ஜினியரிங் வரிக்குப் பிந்தைய இலாபம் முந்தைய ஆண்டை விட 376% உயர்வு

சென்னை, 20 ஜனவரி 2025: உட்கட்டமைப்பு மற்றும் கட்டமைப்புக்கான ஸ்டீல் மற்றும் பொறியியல் தயாரிப்புகள் தொழில்துறையில் ஒரு முன்னணி நிறுவனமாக இயங்கிவரும் ஜி ஜி இன்ஜினியரிங் லிமிடெட், 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த 9 மாதங்கள் காலஅளவிற்கு இந்நிறுவனத்தின் தணிக்கை செய்யப்படாத நிதிசார் முடிவுகளுக்கு, 2025 ஜனவரி 16

அன்று நடைபெற்ற அதன் இயக்குநர்கள் குழு கூட்டத்தில் ஒப்புதல் அளித்திருக்கிறது. டிசம்பர் 31, 2024-ல் முடிவடைந்த 9 மாதங்கள் காலஅளவின்போது, இயக்க செயல்பாடுகளிலிருந்து கிடைக்கும் வருவாய் 9எம்எஃப்ஒய்24-ல் பதிவான ரூ. 13568.40 இலட்சத்திலிருந்து 70.70% அதிகரித்து 23161.72 இலட்சமாக 9எம்எஃப்ஒய்25-ல் பதிவாகியிருக்கிறது. 9எம்எஃப்ஒய்24-ல் 2734.2 இலட்சத்திலிருந்து 325.85% என்ற சிறப்பான

வளர்ச்சியுடன் 9எம்எஃப்ஒய்25-ல் ரூ. 1164.36 லட்சமாக உயர்ந்திருக்கிறது. இபிஐதிடிஏ இலாப வரம்புகள் 9எம்எஃப்ஒய்24-ல் பதிவான 1.98% லிருந்து 298 பிபிஎஸ் உயர்ந்து 9எம்எஃப்ஒய்25-ல் 4.96% ஆக அதிகரித்துள்ளது.

வரிக்கு பிந்தைய இலாபம் (பிஏதி) 9எம்எஃப்ஒய்24-ல் ரூ. 163.44 இலட்சம் என்ற அளவிலிருந்து 376.36% வளர்ச்சி கண்டு 9எம்எஃப்ஒய்25-ல் ரூ. 778.57 இலட்சமாக பதிவாகியிருக்கிறது. பிஏதி இலாபவரம்பும் 9எம்எஃப்ஒய்25 - ல் 213 பிபிஎஸ் அதிகரித்திருக்கிறது.

2006-ல் நிறுவப்பட்ட ஜி ஜி இன்ஜினியரிங் லிமிடெட், மிக உயர்வான உள்கட்டமைப்பு மற்றும் கட்டுமானபணிக்கான ஸ்டீல் மற்றும் பொறியியல் தயாரிப்புகளுக்கான அதிகரித்து வரும் தேவையை பூர்த்தி செய்வதில்

முன்னணி நிறுவனமாக இயங்கிவருகிறது.

தரம் மற்றும் துல்லியத்தில் வலுவான கவனம் செலுத்துவதன் மூலம், இந்நிறுவனம் தொழில்துறையில் தனக்கென ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. உள்கட்டமைப்பு, கட்டுமானம், மெகா திட்டங்கள், நவீன கட்டிடங்கள், உயரமான குடியிருப்பு வளாகங்கள் மற்றும் வணிக பயன்பாட்டுக்கான திட்டங்கள், பொறியியல் அமைப்புகள் போன்ற பல்வேறு தொழில் பிரிவுகளில் இந்நிறுவனத்தின் தயாரிப்புகள் பல்வேறு பயன்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.தனது தயாரிப்புகள் மற்றும் செயல்நடைமுறைகள் வழியாக அதிக மீட்சித்திறன் கொண்ட மற்றும் சுற்றுச்சூழல் ரீதியில் பொறுப்புள்ள எதிர்காலத்தை உருவாக்குவது என்ற குறிக்கோளில் இந்நிறுவனத்தின் தொலைநோக்குத் திட்டம் வலுவான அடித்தளத்தைக் கொண்டிருக்கிறது.

நம்பிக்கை, நம்பகத்தன்மை மற்றும் நேர்த்திநிலையை எட்டுவதில் தளராத அர்ப்பணிப்பு ஆகிய தூண்கள் மீது கட்டமைக்கப்பட்டிருக்கின்ற நற்பெயரைக் கொண்டிருக்கும் ஜி ஜி இன்ஜினியரிங் லிமிடெட் தொடர்ந்து முன்னேற்றம் கண்டு வருகிறது.

அதன் அக்கறைப்

# மதுரவாயல் பகுதியில் கோயில் உண்டியலை உடைத்து பணத்தை திருடிச் சென்ற பழைய குற்றவாளி கைது.

சென்னை, 20 ஜனவரி 2025: சென்னை, வானகரம், சிவபூதமேடு பகுதியில் ஸ்ரீ சிவசக்தி கருமாரியம்மன் கோயில் உள்ளதாகவும், 12.12.2024 அன்று அதிகாலை, மேற்படி கோயிலை சுத்தம் செய்ய சென்ற போது, முன்பக்க கதவு திறந்திருந்த நிலையில், கோயிலில் உள்ள உண்டியல் உடைக்கப்பட்டு, அதிலிருந்த பணம் சுமார் ரூ.3,000/- திருடு போயுள்ளதாகவும், குமார், வ/67 என்பவர் தி-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவில் புகார் கொடுத்ததின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

தி-4 மதுரவாயல் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்து, மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட விஜயகுமார், வ/20, த/பெ.கணேசன், சீமாத்தம்மன் நகர் 7வது தெரு, மதுரவாயல், சென்னை என்பவரை 18.01.2025 அன்று கைது செய்தனர். அவரிடமிருந்து பணம் ரூ.2,000/- பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் எதிரி விஜயகுமார் மீது ஏற்கனவே, மதுரவாயல், வளசரவாக்கம் மற்றும் சிஎம்பிடி ஆகிய காவல் நிலையங்களில் சுமார் 6 திருட்டு வழக்குகள் உள்ளது தெரிய வந்தது.



கைது செய்யப்பட்ட எதிரி விஜயகுமார் விசாரணைக்குப் பின்னர்நேற்று (18.01.2025) நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# முத்தியால் பேட்டை பகுதியில் நடந்து சென்ற நபரிடம் செல்போன் பறித்த நபர் கைது.

சென்னை, 20 ஜனவரி 2025: முத்தியால் பேட்டை பகுதியில் நடந்து சென்ற நபரிடம் செல்போன் பறித்த நபர் கைது.

சென்னை, பிராட்வே, சண்முகராயன் தெருவில் வசித்து வரும் மாதவன், வ/19, த/பெ.ஜெயகோபால் என்பவர் கடந்த 03.12.2024 அன்று அதிகாலை, வேலை முடித்து வீட்டிற்கு செல்ல முத்தியால்பேட்டை, போர்ச்சுக்கீஸ் தெருவில் கையில் செல்போனுடன் நடந்து சென்று கொண்டிருந்த போது, அங்கு இருசக்கரவாகனத்தில் வந்த ஒரு நபர், மாதவன் கையில் வைத்திருந்த செல்போனை பறித்துக் கொண்டு, தப்பிச் சென்றார். இது குறித்து மாதவன், என்-3 முத்தியால்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.



என்-3 முத்தியால்பேட்டை காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செல்போன் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்ட சுரேன் (எ) அப்பு, வ/24, த/பெ.சுரேஷ், சின்ன எர்ணாவூர் 4வது தெரு, விம்கோ நகர், திருவொற்றியூர், சென்னை என்பவரை கைது செய்தனர்.

விசாரணையில் கைது செய்யப்பட்ட எதிரி சுரேன் (எ) அப்பு மீது ஏற்கனவே எண்ணூர் காவல் நிலையத்தில் 5 திருட்டு வழக்குகளும், செங்குன்றம் மற்றும் சாத்தாங்காடு காவல் நிலையங்களில் தலா 1 திருட்டு வழக்கும் உட்பட மொத்தம் 7 திருட்டு வழக்குகள் உள்ளது தெரிய வந்தது.

கைது செய்யப்பட்ட எதிரி சுரேன் (எ) அப்பு விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு, நீதிமன்ற உத்தரவுப்படி சிறையில் அடைக்கப்பட்டார்.

# பரமக்குடி, அருப்புக்கோட்டையில் நம்மவர் படிப்பகம் திறப்பு விழா - மக்கள் நீதி மய்யம் வாழ்த்து




சென்னை, 20 ஜனவரி 2025 அறிவார்ந்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்ற உன்னத லட்சியத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கும் மக்கள் நீதி மய்யம் தலைவர் திரு. கமல் ஹாசன் அவர்களது எண்ணத்துக்கு வடிவம் கொடுப்பது 'நம்மவர் படிப்பகம்' ஆகும்.

ஏற்கெனவே மதுரை மலைச்சாமிபுரத்தில் நம்மவர் படிப்பகம் மிகச் சிறப்பாகவும், அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், தற்போது புதிதாக ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டையில் நம்மவர் படிப்பகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வட அமெரிக்க கமல் ஹாசன் நற்பணி இயக்கம் மற்றும் கமல் பண்பாட்டு மையம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள நம்மவர் படிப்பகங்கள், திறப்பு விழா வரும் 26-ம் தேதி (ஞாயிற்றுக் கிழமை), பரமக்குடியில் காலை 10 மணியளவிலும், அருப்புக்கோட்டையில் மாலை 5 மணியளவிலும் நடைபெற உள்ளது.

போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு மட்டுமின்றி, குழந்தைகள், பெரியவர்கள் என அனைத்துத் தரப்பினருக்குமான புத்தகங்கள், நம்மவர் படிப்பகத்தில் தனித்தனி பிரிவுகளில் இடம்பெற்றுள்ளன. அதேபோல, டிஜிட்டல் நூலகத்துடன் அமைந்த திறன் மேம்பாட்டு மையமாகவும் நம்மவர் படிப்பகம் உருவாக்கப்பட்டுள்ளது. நல்ல வெளிச்சம், காற்றோட்டமான சூழலில் அமைந்துள்ள நம்மவர் படிப்பகத்தில், பெரியவர்கள், குழந்தைகள் ஆகியோர் அமர்ந்து படிக்க தனித்தனியே மேஜை, நாற்காலிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், அதிவேக இன்டர்நெட் வசதியுடன் கூடிய கம்ப்யூட்டர் வசதிகளும் உள்ளன.

தமிழகம் முழுவதும் நம்மவர் படிப்பகங்களை உருவாக்குவதே லட்சியம் என்று தலைவர் திரு. கமல் ஹாசன் அவர்கள் தெரிவித்துள்ள நிலையில், இதற்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்து வரும் கமல் பண்பாட்டு மையம் மற்றும் வட அமெரிக்க கமல்ஹாசன் நற்பணி இயக்கத்தினருக்கு மக்கள் நீதி மய்யம் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

இதேபோல, அனைத்து ஊர்களிலும் நம்மவர் படிப்பகங்கள் உருவாகி, ஆற்றல் மிக்க, திறன்மிகுந்த எதிர்கால தலைமுறையை உருவாக்க வேண்டுமென வாழ்த்துகிறோம்.

# தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில், நடிகர் சத்யராஜின் மகளும் - ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார்.

சென்னை, 20 ஜனவரி 2025: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் முன்னிலையில், இன்று (19.1.2025) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், நடிகர் சத்யராஜ் அவர்களின் மகளும் - ஊட்டச்சத்து நிபுணருமான திவ்யா சத்யராஜ் அவர்கள் தி.மு.க.வில் இணைந்தார்.

அதுபோது, கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர் மாண்புமிகு கே.என்.நேரு, சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் மாண்புமிகு பி.கே.சேகர்பாபு ஆகியோர் உடனிருந்தனர்.



# கே.கே.நகர் பகுதியில் பெண்ணிடம் செல்போன் பறித்தநபர் கைது. 1 செல்போன் மற்றும் 1 இருசக்கர வாகனம் பறிமுதல்.

சென்னை, 20 ஜனவரி 2025: சென்னை, கே.கே.நகர், 9வது செக்டார், 49 வது தெருவில் அம்மு, வ/52, க/பெ.இளமாறன் என்பவர் வசித்து வருகிறார். அம்மு கடந்த 07.01.2025 அன்று இரவு தனது வீட்டின் அருகில் நடைபயிற்சி செய்து கொண்டிருந்த போது, அங்கு இருசக்கர வாகனத்தில் வந்த நபர் ஒருவர் மேற்படி அம்முவின் கையிலிருந்த செல்போனை பறித்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளார். இது குறித்து அம்மு ஆர்-7 கே.கே.நகர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ஆர்-7 கே.கே.நகர் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி செல்போன் பறிப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட சத்யா, வ/25, த/பெ.கணேசன், எண்.114/109, ஆழ்வார்

பேட்டை தெரு, தேனாம்பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து புகார்தாரரின் செல்போன் மற்றும் குற்ற சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் விசாரணையில் கைது செய்யப்பட்ட சத்யா மீது ஏற்கனவே 5 குற்ற வழக்குகள் உள்ளதும் தெரியவந்தது. விசாரணைக்குப்பின்னர் கைது செய்யப்பட்ட எதிரி சத்யா 18.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட உள்ளார்.



# கரூரில் பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை: போக்சோவில் காவலர் கைது

சென்னை, 20 ஜனவரி 2025: கரூரில் பள்ளி மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக காவலரை மகளிர் போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

கரூர் அடுத்த நெரூர் ரங்கநாதன் பேட்டையைச் சேர்ந்தவர் இளவரசன் (38). இவருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. இவர் கரூர் வெங்கமேடு காவல் நிலையத்தில் காவலராகப் பணியாற்றி வருகிறார்.

இந்நிலையில், காவலர் இளவரசனுக்கும் வெங்கமேடு பகுதியைச் சேர்ந்த பிளஸ்-2 மாணவி ஒருவருக்கும் பழக்கம் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. மாணவிக்கு காவலர் இளவரசன் அடிக்கடி பாலியல் தொந்தரவு செய்ததாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து, மாணவியின் பெற்றோர் கரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தனர். இதனைத் தொடர்ந்து, மாணவியின் பெற்றோர் அளித்த புகாரின் அடிப்படையில் போலீசார் வழக்கு பதிவு செய்து காவலர் இளவரசனை இன்று அதிகாலை போக்சோ சட்டத்தின்கீழ் கைது செய்தனர்.




# வசூல்ராஜா வான சுந்தர் சி யின் "மதகஜராஜா"! - பட அதிபர் கே.ஆர் அறிக்கை!!!

## வசூல்ராஜா வான சுந்தர் சி யின் "மதகஜராஜா"! ரிலீஸ் செய்ய உதவியவர்களுக்கு பாராட்டு விழா நடத்த வேண்டும்!! பட அதிபர் கே.ஆர் அறிக்கை!!!

சென்னை, 20 ஜனவரி 2025 : தமிழ் திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்கத்தின் முன்னாள் தலைவர் கே.ஆர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு சுந்தர் சி இயக்கத்தில் விஷால் சந்தானம் மனோபாலா அஞ்சலி வரலட்சுமி ஆகியோர் நடிப்பில் உருவான "மதகஜராஜா" படம் பல் வேறு பிரச்சினைகளால் கிடப்பில் போடப்பட்டிருந்தது. தற்போது இயக்குநர் சுந்தர் சி விஷால் ஏசி சண்முகம் திருப்பூர் சுப்ரமணியம் ஜெமினி பிலிம்ஸ் உள்ளிட்டவர்களின் சீரிய முயற்சியால் பொங்கல் வெளியீடாக திரைக்கு வந்து வசூலை வாரிக் குவித்துக் கொண்டிருக்கிறது. படத்தை தயாரித்தவர்கள் விநியோகித்தவர்கள் திரையிட்டவர்கள் மட்டுமில்லாமல் ரசிகர்கள் மனதிலும் மகிழ்ச்சியை பொங்க வைத்திருக்கிறது மதகஜராஜா. படம் எடுக்கப் பட்டு தாமதமாக ரிலீஸ் செய்யப்பட்டால் அந்த படம் ஓடாது என்ற வறட்டு வாதத்தை அடித்து நொறுக்கி இருக்கிறது இந்த ப்ளாக் பஸ்டர் வெற்றி. சினிமாவை நேசிக்கும் எல்லோருக்கும் இது மிக மகிழ்ச்சியான தருணமாக அமைந்திருக்கிறது. ஏனென்றால் நல்ல படங்களை எடுத்தால் அதன் வெற்றியை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் யாராலும் தடுத்துவிட முடியாது என்பதற்கு இது ஒரு உதாரணம். சினிமா ரசிகர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தி இருக்கும் இந்த படத்தை ரிலீஸ் செய்வதற்கு பெரு முயற்சி எடுத்த அத்தனை பேருக்கும் பாராட்டு விழா நடத்தியே தீர வேண்டும். சினிமாவில் வந்தோம் ஜெயித்தோம் சம்பாதித்தோம் என்று ஒதுங்கி விடாமல் இதுபோன்ற நல்ல படங்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது அதை தீர்ப்பதற்கு தோள் கொடுப்பவர்கள் தான் உண்மையான சினிமாக்காரர்களாக இருக்க முடியும். சங்கங்கள் முன்னின்று செய்ய வேண்டியதை சிலர் நல்ல மனசுடன் ஒன்றுகூடி சாதித்துக் காட்டியிருப்பதை மனமுவந்து பாராட்டுகிறேன்.



ஒரு மகாமகம் போல கொண்டாடப்பட வேண்டிய இந்த வெற்றி, தமிழ் திரைப்பட துறையினரை உற்சாகப் படுத்தியிருப்பதுடன் தமிழ் சினிமா தலைநிமிரப் போவதற்கான ஒரு அறிகுறியாகவும் அமைந்துள்ளது.

சத்தியமாக நேர்மையாக உழைத்தால் தோல்வி யில்லை என்பதை உணர்த்தும் மதகஜராஜா, ரசிகர்களின் ரசனை மாறிவிட்டதாக தங்களை தாங்களே ஏமாற்றிக் கொள்ளும் இயக்குநர்களையும் தயாரிப்பாளர்களையும் சிந்திக்க வைத்திருக்கிறது. மக்களை மகிழ்விக்கும் நோக்கத்தில் எடுக்கப்படும் படங்கள் நிச்சயம் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கிறது.

இதேபோல் இன்னும் எத்தனையோ நல்ல படங்கள் திரைக்கு வரமுடியாமல் முடங்கிக் கிடக்கின்றன. இதில் பல நூறு கோடி பணமும் முடங்கி போயிருக்கிறது. இந்த படங்கள் எல்லாம் திரைக்கு வந்து அதில் சிறந்த படங்கள் வெற்றி பெற்றால் அதன்மூலம் பல திறமையான கலைஞர்கள் அடையாளம் காணப்படுவார்கள். சினிமா தொழில் சிறப்படையும். எனவே திரைப்பட துறையில் இயங்கி வரும் சங்கங்கள் இனிமேலாவது இது போன்ற முயற்சிகளில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கே ஆர் கூறியுள்ளார்.





# ‘ஒரே நாடு ஒரே தேர்தல்‘ மூலம் ஒரே அரசு என்ற நிலையை உருவாக்க, மாநிலங்களை அழிக்கப் பார்க்கிறார்கள்!

## பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி அவர்களைச் சர்வாதிகாரியாக ஆக்கத்தான் இந்தச் சட்டம் பயன்படும்!

## கழகத் தலைவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உரை




சென்னை, 20 ஜனவரி **2025 - 18.01.2025** அன்று சென்னையில் நடந்த தி.மு.கழகச் சட்டத்துறையின் மூன்றாவது மாநில மாநாட்டில் கலந்துகொண்டு ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

தமிழ்நாட்டையும் - தமிழ்மொழியையும் - தமிழினத்தையும் - காக்கும் காவல் அரணாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தாங்கிப் பிடிக்க - தூணாகத் தூக்கி நிறுத்த - எத்தனையோ சார்பு அணிகள் இருக்கிறது! அதில் தனித்துவமானது நம்முடைய சட்டத்துறை! இது, வழக்கறிஞர்கள் அணி மட்டுமல்ல; கழகத்தைக் காக்கும் காவல் அணி!

சோதனை நெருப்பாறுகள் பல கடந்து - அள்ளிவீசப்பட்ட அவதூறுகளை எதிர்கொண்டு - நாள்தோறும் கட்டமைக்கப்படும் பொய்களைத் தகர்த்தெறிந்து - 75 ஆண்டுகளாகக் கற்கோட்டையாகக் கழகம் நிமிர்ந்து நிற்கிறது; ஆறாவது முறை ஆட்சியமைத்து இருக்கிறது என்றால், அதற்கு லட்சக்கணக்கான கழக வீரர்களின் தியாகம்தான் காரணம்! அந்தத் தியாகங்களுக்கு துணை நின்ற வரலாற்றுக்குச் சொந்தக்காரர்கள்தான் சட்டத்துறையைச் சார்ந்த நமது வழக்கறிஞர்கள்!

அப்படிப்பட்ட உங்களை ஒருங்கிணைத்து, இந்த மாநாட்டை நம்முடைய என்.ஆர்.இளங்கோ அவர்கள் மிகச் சிறப்பாக - அறிவுப்பூர்வமாக - ஆக்கப்பூர்வமாக - ஏற்பாடு செய்திருக்கிறார். நீதிமன்றத்திலும், நாடாளுமன்றத்திலும் தன்னுடைய வாதத் திறமையால் அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பவர் அவர்! அமைதியான வகையில் ஆக்கப் பணிகளை செய்வதுதான் அவருடைய ஸ்டைல்!

அவருக்குத் துணை நின்று செயலாற்றும் - கழகச் சட்டத்துறையின் தலைவர் இணைச் செயலாளர்கள் துணைச் செயலாளர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் பாராட்டுகள்!

இந்தத் தமிழ்ச் சமுதாயத்தை பண்படுத்தும் - சீர்திருத்தும் - முற்போக்குக் கருத்துகளை மேடைதோறும் முழங்கிய கழகச் செயல்வீரர்கள் மீது பாய்ந்த வழக்குகளை எல்லாம், சுக்குநூறாகத் தகர்த்தெறிந்த சட்டப்போராளிகள் நீங்கள்! கழகம் தொடங்கப்பட்டு வளர்ந்து வந்த காலத்தில், தொண்டர்கள் மீதான அடக்குமுறைகளை எதிர்கொள்ள, சென்னையில் இருந்து வழக்கறிஞர்களைத் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி வைப்பார் பேரறிஞர் அண்ணா. அப்படி அவர்கள் நடத்திய சட்டப் போராட்டங்களும் - பெற்ற வெற்றிகளும் **1966**-ஆம் ஆண்டு மதுரையில் நடந்த தி.மு.க. வழக்கறிஞர்கள் மாநாட்டுக்குக் காரணமானது! பேரறிஞர் அண்ணா காலத்தில் வழக்கறிஞர் குழுவாக இருந்ததை, தலைவர் கலைஞர் சட்டத்துறையாக வளர்த்தெடுத்தார்! கழகத்துக்காகப் போராடிய ஒவ்வொரு கழக முன்னோடியைக் கேட்டாலும், சட்டத்துறையின் பங்களிப்பைப் பற்றிச் சொல்வார்கள்...

**1975** - இல் எமர்ஜென்சி அறிவிக்கப்பட்டபோது, நான் உட்பட பலரும் ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டோம்! வெளியில் இருந்த கழகத் தோழர்கள் பலரும் பல்வேறு வழக்குகளை எதிர்கொண்டார்கள்! அவர்கள் அனைவரையும் பாதுகாத்தது சட்டத்துறைதான்!

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தலைவர் கலைஞர் மேல் ஏராளமான வழக்குகளைப் போட்டார்கள்... அப்போது கலைஞருக்காக வாதாட பெரும் படையே வரும்... நம்முடைய ஆர்.எஸ்.பாரதியைக் கேட்டால், அந்த வரலாற்றையெல்லாம் விரிவாகச் சொல்வார்...

கழகம் எதிர்க்கட்சியாக இருக்கும்போதெல்லாம், மக்களுக்கான போராட்டங்களை நடத்தி, ஏராளமான வழக்குகளைச் சந்தித்திருக்கிறோம்... கடந்த கால அ.தி.மு.க. ஆட்சிகளில் காழ்ப்புணர்ச்சியோடு புனையப்பட்ட ஏராளமான பொய் வழக்குகளை எதிர்கொண்டிருக்கிறோம்... அப்போதெல்லாம் துணையாக நின்ற அமைப்புதான், இந்தச் சட்டத்துறை!

சட்டத்துறையின் முக்கியமான சட்டப் போராட்டங்களை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு நாமெல்லாம் கம்பீரமாக உட்கார்ந்திருக்கிறோமே ‘அண்ணா அறிவாலயம்’, அந்த இடத்திற்கே நெருக்கடி வந்தது... அதைக் கட்ட அனுமதி இல்லை என்று சொல்லி, தடை போட்டார்கள். அந்தத் தடையை உடைத்தது, இந்தச் சட்டத்துறைதான்!

கருப்பு சிவப்பு கொடிக்கும் - உதயசூரியன் சின்னத்துக்கும் ஒரு காலத்தில் பிரச்சினை வந்தது. அதை மீட்டுத் தந்ததும், இந்தச் சட்டத்துறைதான்!

அம்மையார் ஜெயலலிதா ஆட்சிக்கால முறைகேடுகளைத் தடுக்க நம்முடைய மரியாதைக்குரிய சண்முகசுந்தரம் அவர்கள், தன்னுடைய உயிரைப் பணயம் வைத்து, போராடினார். அவரின் அந்தத் தியாகம், விலைமதிப்பில்லாதது!

அடுத்து, இன்றைக்கும் நம்முடைய நெஞ்சங்களில் ஆறாத வடுவாக இருப்பது, தலைவர் கலைஞரின் நள்ளிரவுக் கைது! அந்தக் கொடூரமான கைதையும் நீதிமன்றத்தில் கவனப்படுத்தி வாதிட்டதால்தான், அன்றைக்கு இருந்த அராஜக அரசு அடிபணிந்து, தலைவர் கலைஞரை விடுதலை செய்தது! கழகத்தின் மீது கற்பிக்கப்பட்ட களங்கத்தில் இருந்து ஆ.இராசா வாதாடி வென்றார்.

இது அனைத்துக்கும் மேல், தலைவர் கலைஞர் மறைந்தபிறகு, பேரறிஞர் அண்ணாவின் அருகில் அவர் துயில்கொள்ள நடந்த சட்டப் போராட்டம்... அன்றைக்கு இருந்த நிலைமையை நான் அதிகமாக விளக்க விரும்பவில்லை. நம்முடைய வில்சன் உள்ளிட்ட மூத்த வழக்கறிஞர்களின் வாதங்களால்தான், கடற்கரையில் கலைஞருக்கான இடத்தைப் போராடிப் பெற்றோம்!

இப்படி தொடர்ந்து, இது சட்டத்துறையா - இல்லை, சாதனைத் துறையா என்று வியப்படையும் வகையில், ஏராளமான சட்டப்பூர்வ சாதனைகளைச் செய்திருக்கிறீர்கள். கட்சிக்காக மட்டுமல்ல, மக்களின் நலனுக்காகவும் ஏராளமான பணிகளைச் செய்திருக்கிறோம்.

* அ.தி.மு.க. ஆட்சி முடக்க நினைத்த சமச்சீர் கல்வியைக் காப்பாற்றினோம்.

* குடியுரிமைத் திருத்தச் சட்டத்துக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தோம்.

* நீட் தேர்வு முறைகேடுகளைத் தடுக்க அமைக்கப்பட்ட நீதியரசர் ஏ.கே.ராஜன் குழுவுக்கு எதிரான வழக்கை தடுத்தோம்!

* மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக முதன்முதலில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து தடை வாங்கினோம்.

* கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா இருக்கும் இடத்தை தனியாரிடம் இருந்து மீட்கக் காரணமாக இருந்தோம்!

* இது அனைத்துக்கும் மேல், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்ததும் இந்த வழக்கறிஞர் படைதான்!

* மருத்துவம் மற்றும் மருத்துவ உயர் கல்வியில் இன்றைக்கு ஆண்டுதோறும் 5 ஆயிரத்து 500 இடங்கள் கூடுதலாகக் கிடைக்கிறது என்றால், இந்தச் சமூகநீதி சாதனையை ஒட்டுமொத்த இந்தியாவுக்குமே சாத்தியப்படுத்தியது நம்முடைய சட்டத்துறைதான்! இந்தச் சாதனைப் பயணம் தொடர, இந்த நேரத்தில் உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன்!

தி.மு.க. சட்டத்துறைக்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது... ஒரு கம்பீரம் இருக்கிறது... அறிவு முகம் இருக்கிறது! நம்முடைய சட்டத்துறையில் இருந்துதான், நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் போன்றவர்கள் உருவானார்கள்...

சட்டத்துறையைச் சேர்ந்தவர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகளாக - உயர்நீதிமன்ற நீதிபதிகளாக - மாநில அமைச்சர்களாக - ஒன்றிய அமைச்சர்களாக - நாடாளுமன்ற உறுப்பினர்களாக - சட்டமன்ற உறுப்பினர்களாக சிறப்பாக பணியாற்றினார்கள்; பணியாற்றி வருகிறார்கள்... நீதிமன்றங்களில் மட்டுமல்ல, தொலைக்காட்சி விவாதங்களிலும் எதிர்கட்சியினரின் பொய்களைத் தங்களுடைய கூர்மையான வாதங்களால் தோலுரிக்கிறார்கள்! இவ்வாறு, கழகத்துக்கு தோள் கொடுக்கும் இந்தச் சட்டத்துறையில் இருந்து, ஏராளமான ரத்தினவேல் பாண்டியன்கள் உருவாக வேண்டும்! அதாவது, நம்முடைய சட்டத்துறையில் இருந்து மாவட்ட நீதிபதிகள் உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஸ்ரீ உச்சநீதிமன்ற நீதிபதிகள் உருவாக வேண்டும்!

இங்கு ஏராளமான மூத்த வழக்கறிஞர்கள் இருக்கிறீர்கள்... நீங்கள் நம்முடைய இளம் வழக்கறிஞர்களுக்கு அதற்கான வழிகாட்டியாக இருக்க வேண்டும்! பயிற்சிகளை வழங்க வேண்டும்! இளம் வழக்கறிஞர்களுக்குச் சட்டத்தின் பார்வையோடு, சமூகநீதியின் பார்வையும் உருவாக பயிற்றுவிக்க வேண்டும்!

அடுத்ததாக, உங்கள் முன்னால் இருக்கும் இன்னொரு முக்கியக் கடமை ஸ்ரீ நாம் தொடர்ந்து வைத்து வரும் கோரிக்கையான, நீதிபதிகள் நியமனத்தில் சமூகநீதி பின்பற்றபட உரையாடல்களை நீங்கள் தொடங்க வேண்டும்!

அடுத்து, நம்முடைய என்.ஆர்.இளங்கோ ஏற்பாடு செய்திருக்கும் இந்த மாநாட்டின் முக்கியமான நிகழ்ச்சியாக,

* மாநிலங்களவை உறுப்பினர் - ஒன்றிய முன்னாள் அமைச்சர் கபில் சிபல் ஸ்ரீ * முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் எஸ்.ஒய்.குரேஷி - * மூத்த பத்திரிகையாளர் இந்து என்.ராம் ஆகியோரைக் கொண்ட, “ஒரு நாடு ஒரு தேர்தல்” என்ற கலந்துரையாடல் ஏற்பாடு செய்து, அவர்களும் தங்களுடைய வாதங்களை அழுத்தமாக வைத்திருக்கிறார்கள்! இன்றைய காலக்கட்டத்தில் மிகத் தேவையான உரையாடல் இது! இந்த மாநாடு வாயிலாக, நான் அனைவருக்கும் சொல்லிக் கொள்ள விரும்புவது, ஒன்றியத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பா.ஜ.க.வை பொருத்தவரைக்கும், ஒரே மதம் - ஒரே மொழி - ஒரே பண்பாடு - ஒரே உடை - ஒரே உணவு என்று ஒற்றைப் பண்பாட்டை நோக்கி நாட்டை நகர்த்த பார்க்கிறது! அதற்காகத்தான் ஒரே தேர்தல் என்று கிளம்பியிருக்கிறார்கள். ஒரே அரசு என்ற நிலையை உருவாக்க மாநிலங்களை அழிக்கப் பார்க்கிறார்கள்!

பா.ஜ.க.வைப் பொருத்தவரைக்கும் பெரும்பாலும் குறுகிய கால செயல்திட்டமாக இருக்காது... நீண்டகால செயல்திட்டமாகத்தான் இருக்கும்! இப்போது நாடு முழுவதும் ஒரே நேரத்தில் தேர்தல் என்று சொல்பவர்கள், காலப்போக்கில் நாட்டுக்கே ஒரே தேர்தல்தான் என்று சொல்லும் நிலைமையை உருவாக்க நினைக்கிறார்கள். இது ஒற்றையாட்சிக்குதான் வழிவகுக்கும்! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இது, தனி மனிதர் ஒருவரிடம்தான் அதிகாரத்தைக் கொண்டு சென்று சேர்க்கும்! இது, பா.ஜ.க. என்ற கட்சிக்கே கூட நல்லதல்ல! இன்றைக்கு பிரதமராக இருக்கும் நரேந்திர மோடி அவர்களைச் சர்வாதிகாரியாக ஆக்கத்தான் இந்தச் சட்டம் பயன்படும்! பா.ஜ.க.வும் - பா.ஜ.க.வுக்கு மூளையாக இருந்து செயல்படும் அமைப்புகளும் விரிக்கும் வலையில், இன்று அரசியல் காரணங்களுக்காக பா.ஜ.க.வை ஆதரிக்கும் கூட்டணிக் கட்சிகள் விழுந்துவிடக் கூடாது... இந்தச் சட்டத்தை ஆதரிக்கக் கூடாது என்று இந்தக் கூட்டத்தின் வாயிலாகக் கோரிக்கை வைக்கிறேன். பா.ஜ.க. ஆட்சியை ஆதரிப்பது, உங்கள் தனிப்பட்ட விருப்பம்... ஆனால், இந்தியாவின் கூட்டாட்சிக் கருத்தியலுக்கே முரணான சட்டங்களை, மக்களாட்சி மேல் நம்பிக்கை வைத்திருக்கும் எந்த அரசியல் அமைப்புகளும் ஆதரிக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு ஒரு திட்டத்தை அறிவித்தபோது, நம்மைப் போன்ற அரசியல் இயக்கங்களைக் கடந்து, வெளியில் இருந்து எதிர்த்தவர், முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் மரியாதைக்குரிய எஸ்.ஒய்.குரேஷி அவர்கள். “பல முறை தேர்தல்கள் நடத்துவதால், தேர்தல் செலவு அதிகமாகிறது” என்று பா.ஜ.க. தரப்பு சொன்னபோது, “ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதால்தான் அதிகமான செலவாகும். தேர்தலுக்கான கருவிகளும், ஆட்களும், பாதுகாப்பும் ஒரே நேரத்தில் தேவைப்படுவதால் செலவு அதிகமாகத்தான் ஆகும்” என்று குரேஷி அவர்கள் சரியாகச் சொன்னார்.

இந்தச் சூழலில், இந்திய அரசியலமைப்பை - கூட்டாட்சிக் கருத்தியலைக் காக்க ஒரே நாடு ஒரே தேர்தல் முறையை நாம் இறுதி வரை எதிர்த்தாக வேண்டும். ஏன் என்றால், நான் முன்பே சொன்னது போன்று, பா.ஜ.க.வின் செயல்திட்டங்கள் நீண்ட காலத்துக்கானது. தங்களின் செயல்திட்டங்களுக்கு இடையூறாக இருப்பவர்களுக்கு எதிரான கருத்துருவாக்கங்களை மெதுவாகச் சமூகத்தில் விதைப்பார்கள்... அதற்கு துணையாகப் பல எடுபுடிகளை பேச வைப்பார்கள்... தங்களின் கையில் இருக்கும் ஊடகங்களை வைத்தே பொய்ச் செய்திகளை பரப்புவார்கள்... விவாதங்களைக் கட்டமைப்பார்கள்... அளவில்லால் அவதூறுகளை அள்ளி இறைப்பார்கள்... பச்சையான பொய்களால் கொச்சைப்படுத்துவார்கள்... பா.ஜ.க.வின் வாட்ஸ் அப் யூனிவர்சிட்டி தீயாக வேலை செய்யும்ஞ் இதையெல்லாம் கடந்துதான் நாம் போராட வேண்டும்! வெற்றி பெற வேண்டும்!

இப்போது கூட, இந்திய நாட்டையும் - அரசியலமைப்புச் சட்டத்தையும் - மக்களாட்சியையும் காக்கத்தான் நாம் போராடிக் கொண்டு இருக்கிறோம்... ஆனால், நம்மை அரசியலமைப்புச் சட்டத்துக்கு எதிரானவர்களாகச் சித்தரிக்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார் தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்கள். எந்த ஆளுநர்? மரபுப்படி, நிறைவாக பாடப்படும் நாட்டுப்பண் பாடலுக்குக்கூட நிற்காமல் வெளியேறிய ஆளுநர்! இருந்தாலும் - ஒன்றிய அரசுக்கு நான் வைக்கும் கோரிக்கை என்பது, நான் ஆளுநரை விமர்சிக்கிறேன் என்று அவரை மாற்றிவிடாதீர்கள்... அவர் பேச பேசத்தான் பா.ஜ.க. அம்பலப்படுகிறது... திராவிடக் கொள்கைகள் மேலும் மேலும் மக்களிடம் சென்று சேருகிறது... மக்களுக்கும் மாநில சுயாட்சி முழக்கத்தின் நியாயங்கள் புரிகிறது! இன்னும் சொல்ல வேண்டும் என்றால், இன்று முழுவதும் இந்த மாநாட்டில், நம்முடைய தோழர்கள் திராவிடவியல் குறித்து அழுத்தமாக உணர்வோடு பேசுவதற்கான தூண்டுகோலாக இருப்பவரும் நம்முடைய ஆளுநர்தான்!

தந்தை பெரியார் அடிக்கடி ஒன்றைச் சொல்வார், “என்னை செயல்பட வைப்பது, என்னுடைய தோழர்கள் அல்ல; என்னுடைய எதிரிகள்” என்று சொல்வார். அப்படிப்பட்ட கொள்கை எதிரிகளை - பண்பாட்டு எதிரிகளைத்தான் நாம் இன்றைக்குப் பார்த்துக் கொண்டு இருக்கிறோம்!

இன்றைய எதிரிகள் கருத்தியல் மோதலுக்கு தயாராக இல்லை! ஏன் என்றால், கருத்தியல்ரீதியாக பேசினால் அவர்களால் ஒருபோதும் வெற்றிபெற முடியாது! அதனால்தான், அவதூறுகளை ஆயுதங்களாக எடுக்கிறார்கள்... அந்த துரோகக் கூட்டத்தைத் துடைத்தெறிய வேண்டிய கடமை - சட்டப் போராளிகளான உங்களுக்கு இருக்கிறது! இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை காக்கும் கடமை நமக்கு இருக்கிறது! இந்தியா முழுமைக்கும் சமூகநீதியை உருவாக்கித் தந்து பாதுகாக்கும் கடமையும் நமக்கு இருக்கிறது!

எனவே, இங்கிருக்கும் சட்டப் போராளிகளுக்கு நான் சொல்லிக் கொள்வது, நீங்கள் கொள்கைப் போராட்டத்திலும் உதவ வேண்டும்; தேர்தல் களத்திலும் உதவ வேண்டும்! தேர்தல் நேரத்தில் உங்களுடைய ‘வார் ரூம்’ பணிகள் மகத்தானது! பாராட்டுக்குரியது! இந்த நேரத்திலும் அதை நினைத்து நான் மகிழ்கிறேன்.

**2019** முதல் நடந்த அனைத்து தேர்தல்களிலும் நாம் தொடர்ந்து வெற்றி பெறுவதற்கு உங்களுடைய பணிகளும் முக்கியக் காரணம்! இந்த வெற்றிப் பயணம் **2026**-லும் தொடர வேண்டும்!

**2026** தேர்தல் வெற்றி என்பது, நம்முடைய திராவிட மாடல் ஆட்சிக்கு, மக்கள் அளிக்கப் போகும் மகத்தான அங்கீகாரமாக அமையப் போகிறது! திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மீண்டும் அமைய - இந்தியா முழுமைக்கும் திராவிடக் கோட்பாடுகளை வென்றெடுக்க - கழகச் சட்டத்துறை சளைக்காமல் - சமரசம் இல்லாமல் உழைக்க வேண்டும்!

கழகத்தின் காவல் அரணாக விளங்கும் சட்டத்துறை சார்பில், கழக வழக்கறிஞர்கள் நலனுக்காக இன்றைக்கு ஐந்து கோடி ரூபாய் கொடுத்திருக்கிறீர்கள்...

அதை ஆக்கப் பூர்வமான திட்டங்களில் பயன்படுத்திக் கொள்ள என்.ஆர்.இளங்கோ அவர்களை ஒரு செயல் திட்டம் வகுக்கச் சொல்லி இருக்கிறேன். அதனடிப்படையில், அதற்கான அறிவிப்புகள் வரும் என்பதைச் சொல்லி, கழக வழக்கறிஞர்கள் அனைவருக்கும் நல்வாழ்த்துகளையும் நன்றியையும் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி! வணக்கம்!